4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை

திரு. இரா. முத்தையா : தலைவர் அவர்களே, (1) தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் குறித்து, 1973-74 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழு அளித்த மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் அறிக்கையை (பத்தாவது அறிக்கை) அளிக்கிறேன்.

2. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் குறித்து, 1974-75 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழு அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் அறிக்கையை (பதினோராவது அறிக்கை) அளிக்கிறேன்.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) ஆளுநரின் இசைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979-80-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து, ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

'In pursuance of Article 203, clause (3) of the Constitution of India, I, Prabhudas Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Further Grants for the year 1979-80.

5. முதல் துணை நிதி அறிக்கை 1979-80 —விவாதம்.

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 1 மணிக்கு மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு எடுக்க இல்லட்டின். எல்லோரும் அதற்குள்ளாக பேசி முடித்தால் நல்லது. ஒரு மணிக்கு வாக்கெடுப்பு எடுக்கவேண்டும் என்பதால், அதை நினைவில் வைத்து உறுப்பினர்கள் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.